[6th September 1960

THE HON. SRI M. A. MANICKAVELU : இதிலே குறிப்பிடப் பட்ட கிராமங்கள் 21. இந்த கிராமங்கள் ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த தகவல் என்னிடம் இருக்கிறது. ஏதாவது ஒரு கட்டத்தில் அங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டுத்தான் வருகிறது.

SRI K. R. NALLASIVAM : மேட்டூர் கால்வாய், கீழ் பவானி கால்வாய் ஆகிய இரண்டு பகுதியிலுமாக உள்ள சேரிகளில் நீர்க் கசிவு காரணமாக ஏற்படுகிற இன்னல்களைப்போகக ஐந்தாறு ஆண்டுகளாகத் திட்டமிடப்பட்டு வந்தும் கூட வருஷத்துக்கு நான்கைந்து சேரிகளுக்குத்தான் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. துரிதமாக இதை நிறைவேற்ற விசேஷ நிதி, திட்டம் ஏதாவது வகுப்பதற்கு யோசனை செய்ய முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஏதாவது ஒரு நட வடிக்கை எடுக்கப்படுகிறது. ஓரிடத்தில் நோட்டிபிகேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஓர் இடத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்ய நோட்டிபை பண்ணப்பட்டிருக்கிறது. இப்படி ஏதாவது ஒரு நடவடிக்கை எல்லா இடங்களிலும் எடுத்துக்கொள்ளப் பட்டுத்தான் வருகிறது.

SRI G. G. GURUMURTHI : ஹரிஜன சேரிகள் மட்டும் அல்லா மல், மிகவும் பின் தங்கிய கிராமங்களில் உள்ளவர்களுக்கும் பரிகாரம் காண அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எந்த எந்தப் பகுதி யிலே நீர் கசிவு ஏற்படுகிறதோ அங்கெல்லாம் நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

Pumpsets

* 469 *Q*.—SRI K. R. NALLASIVAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை ஜில்லா ஈரோடு தாலூகாவிலுள்ள காலிங்க ராயன் வாய்க்கால் வலதுபக்கப் பாசனப் பகுதியில் இறவைப் பாசனத்திற்கு அனுமதி பெற்றுள்ள நிலங்களில் பம்ப் செட் வைத்துத் தண்ணீர் இறைத்துக் கொள்வது பற்றி, சம்பந்தப்பட்ட விவசாயிகள் முறையீடுகள் ஏதேனும் செய்து கொண்டார்களா ?

(ஆ) அதன் மீது சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under the consideration of the Government.

6th September 1960]

SRI K. R. NALLASIVAM : அதாவது காலிங்கராயன் வாய்க்காலைப் பொறுத்த வரையில் கீழ் பவானியின் பின்னுல் நீர்க்கசிவு ஏற்பட்டு வருகிறது. முன்பு அது சரியில்லாத காரணத்தினுல் பம்பு செட்டுகள் வைப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. இப்போது தண்ணீரும் தொடர்ந்து வந்துகொண்டிருப்பதனுல் பம்பு செட்டுகள் வைப்பதற்கு அனுமதி கொடுப்பது பற்றி சர்க்கார் முடிவு செய்வார்களா என்று கேட்கவிரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் நான் சொன்ன பதிலை கவனிக்கவேண்டும். அரசாங்கத்தின் கவனத்தில் இதுபற்றி யோசனை இருந்து வருகிறது என்று சொன்னேன்.

* 470 Q.—SRI K. R. NALLASIVAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் கீழ்பவானிப் பாசனப் பகுதியில் மின்சார உபயோகத்துக்குத் தடை நீக்கப்பட்ட பின், தாலூக்கா வாரியாக, மின்சார பம்ப்செட்டுகளுக்கு அனுமதி கோரி விவசாயிகளிடமிருந்து சர்க்காருக்கு எத்தனை விண்ணப்பங்கள் வந்தன ?

(ஆ) எத்தனை பம்ப் செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது தாலூக்காவாரியாக ?

(இ) இப் பகுதியில் மின்சார இணைப்பை துரிதப்படுத்த விசேட நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : (a) Gobi—444.

Bhavani—108.
Erode—492.
Dharapuram—309.
Karur—79.

(b)—

Gobi—47.
Bhavani—1.
Dharapuram—4.

(c) Every effort is being taken to extend supply to the wells in the Lower Bhavani Project area according to priority of applications and readiness of parties to avail themselves of supply.

SRI V. S. MANIKKASUNDARAM : இந்த ஜனங்களின் விண்ணப்பத்தை அனுசரித்து சர்க்கார் 1—9—1956-ல் ஜீ.ஓ. 9797 பி.டப்ள்யூ. என்ற உத்தரவை பிறப்பித்தார்களா ? அந்த உத்தரவை அனுசரித்து அங்கு கொடுக்கப்படும் மின்சார பம்ப் செட்ஸ், ஆயில் என்ஜின் பம்ப்செட்ஸ் இவைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா ? அளிக்கப்பட்டிருந்தால் எத்தனை